முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1609

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.02.2024,** சனிக்கிழமை

1. ஆறுமுகப்பெருமான் என் அவதார
ஆற்றல்மிக்க ஞான தேசிகனே
மாறுதலை புரிவேன் என மாதவபலம் அத்தனையும்
மண்ணுலகில் மாதர்மமாக்கி அருளுகின்ற
2. அருளுகின்ற குருராஜனே அரங்கனே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும் அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
வரமென சோபகிருது சால் திங்கள்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 12 ம் நாள், 24.02.2024, சனிக்கிழமை)
வழங்குவேன் அரங்கன் சக்தி இன்னும் பெருக
3. பெருகவே நித்தம் நித்தம் அரங்கனுக்கு
பிரம்ம வேளை மகா சூட்சுமங்கள்
சூட்சுமங்கள் வரமாக அருளி
சுருதிபடி உலகோர்க்கு தீட்சையாக
4. மாட்சிமை பட அருளி மக்களை எல்லாம்
மகான்கள் ஆக்க உண்டான வித்தையை
வித்தையை அரங்கன் உன் வழி
வேலவன் யான் சூட்சுமமாய் செய்து வருகின்றேன்
5. சக்திமிகு அரங்கன் தர்மமே
சாற்றிடுவேன் இதில் சர்வபலமாய் இருக்க
இருக்கவே உலகோர் அரங்கனிடம்
இணைந்து அன்னதானத்தில் உதவி
6. கருத்தாக அரங்கன் தருகின்ற தீட்சை பலத்தை
கட்டளையாக ஏற்று உலகோர் ஜெபதபங்கள்
ஞானிகள் பேரிலான பூஜையாக
நாளும் சரவணச்சுடரேற்றி வழிபாடு தொடர

7. தொடரவே கலியில் மாற்றம்
தேசிகன் வழிகாட்டலில் இனிதே நடந்தேறும்
தடையற வேலவன் என் காட்சி
தக்கபடி தொண்டர் பெருமக்கள் அனைவருக்கும்

8. அனைவருக்கும் சடுதி நிகழப்பட்டு
அவரவரும் அழியாமை என்கின்ற ஞானத்தை
இடரின்றி இந்த பேருலகில் அடைந்து
இனிதே உலகமாற்றம் நிகழ்த்த நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–